**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 2015–2016 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பு – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்தவர்களுக்கு எம்பராய்டரி தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்குதல் – ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி–2) துறை

அரசாணை (நிலை) எண்.10

நாள் :11.01.2016.
திருவள்ளுவர்ஆண்டு 2046.
மார்கழித் திங்கள் 26 –ஆம் நாள்.

படிக்க :

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5 அவர்களின் கடிதம் எண்.ஆ2/24687/2015, நாள்.23.09.2015.

-----

**ஆணை:-**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 16.09.2015 அன்று நடைபெற்ற இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் 2015–2016 –ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் புதிய அறிவிப்பு மற்ற இனங்களுடன் அறிவிக்கப்பட்டது.

" ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்களுக்கு எம்பராய்டரி தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்குதல்"

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக சமூக நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளில் விலையில்லா எம்பராய்டரி தையல் இயந்திரங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது எனவும் ஆனால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சாதாரண தையல் இயந்திரம் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது எனவும் அனைத்து மாவட்டங்களிலும் எம்பராயிடரி தையல் இயந்திரம் வழங்கக்கோரி அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன எனவும் மேலும் இத்தையல் இயந்திரங்களைக் கொண்டு பல்வேறு வகையில் வேலைப்பாடுகளுடன் கூடிய உடைகளைத் தைத்துக் கொடுப்பதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர் இனத்தவரின் தனி மனித வருமானம் உயர வழிவகுக்கும் எனவும் தெரிவித்து ஒரு இயந்திரத்தின் விலை தோராயமாக ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்தால் தரமான இயந்திரங்களைக் கொள்முதல் செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், 2015–2016 –ஆம் ஆண்டு முதல் ஒரு மாவட்டத்திற்கு ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்தவ ஆதிதிராவிட பயனாளிகள் 20 பேர் வீதம் தேர்வு செய்து மொத்தம் 640 பயனாளிகள் பயன்பெறும் வகையில் எம்பராய்டரி தையல் இயந்திரங்கள் வழங்கலாம் எனவும் இத்துறையின் பள்ளிகள் மற்றும் விடுதிகளில்

த.பி.பா.

பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் 4 இணை விலையில்லா சீருடைகள் சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன எனவும் மாவட்டங்கள் தோறும் இத்துறை மூலம் எம்பராய்டரி தையல் இயந்திரம் வழங்கப்படும் 20 நபர்களைக் கொண்ட குழுவை அமைத்து மாணவ/மாணவியருக்கு சீருடைகள் தைத்து வழங்கினால் இவர்களது ஆண்டு வருமானம் உயரும் எனவும் ஓராண்டில் மூன்று மாதங்களுக்கு மேல் இப்பணியில் இவர்களுக்கு வருமானம் கிட்டும் எனவும் மற்ற மாதங்களில் பொது மக்களுக்கு வேலைப்பாடுகளுடன் துணிகள் தைத்து கொடுப்பதால் இவர்களுக்கு கூடுதல் வருமானம் கிட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும் எம்பராய்டரி தையல் இயந்திரங்களை 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த சட்டம் மற்றும் 2000 –ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த விதிகளின்படி கொள்முதல் செய்திடவும், ஒப்பந்தப் புள்ளியின் இறுதியில் நிர்ணயம் செய்யப்படும் விலைக்கேற்ப எத்தனை எம்பராய்டரி தையல் இயந்திரங்களை கொள்முதல் செய்ய இயலுமோ அத்தனை எம்பராய்டரி தையல் இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கலாம் எனவும் இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு கொள்முதல் செய்து செலவினமாக தொகை ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) கோடி செலவாகும் என்றும் எம்பராய்டரி தையல் இயந்திரங்களை வாங்கி வழங்க தேவைப்படும் தொகை ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) ஆதிதிராவிடர் நல இயக்குநர் பெற்று நடைமுறையில் உள்ள விதிமுறைளைப் பின்பற்றி வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை பகிர்ந்தளிக்க அதிகாரம் வழங்கியும் நிர்வாக/நிதி ஒப்பளிப்பு அளித்தும் அரசாணை பிறப்பிக்கும்படியும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்காணும் ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் அறிவிற்புக்கிணங்க ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்களுக்கு எம்பராய்டரி தையல் இயந்திரங்கள் வாங்கி வழங்க ரூ.96,00,000/– (ரூபாய் தொண்ணூற்று ஆறு இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(i) இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய எம்பராய்டரி தையல் இயந்திரங்களை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 –ன் படி விதிகளை அனுசரித்து வாங்க வேண்டும்.

(ii) அந்நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் விலை தோராய விலைக்கு கூடுதலாக இருக்கும்பட்சத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப எம்பராய்டரி தையல் இயந்திரங்களை கொள்முதல் செய்யவும், அதே சமயத்தில் விலை குறைவாக இருக்கும்பட்சத்தில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் எம்பராய்டரி தையல் இயந்திரங்களை வாங்கிவிட்டு மீதித்தொகை அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும்.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 800 ஏனைய செலவு பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JB தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு நிதி உதவி – 11 மானியங்கள் –01 தனித்திட்ட மானியம் (த.தொ.கு .2225 01 800 JB 1113)"

7. மேலே பத்தி 5 –இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணியாக" கருதப்படமாட்டாது என்றும் 2015–2016 –ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப்பேரவையில் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். இச்செலவிற்கான கூடுதல் நிதி 2015–2016 –ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது நிதியொதுக்கம் செய்யப்படும் வரை செலவினை மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி இயக்கக அளவில் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி (Centralised Tender) மூலம் எம்பிராய்டரி தையல் இயந்திரங்கள் வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் மூலமாக பயனாளிகளுக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

9. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியினை 2015–2016 –ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதித்(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. மேலும், எம்பராய்டரி கருவிகள் பயனாளிகளுக்கு விநியோகம் செய்த பின்னர் ஒரு விவரமான அறிக்கையை அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் பெற்று அரசுக்கு அனுப்புமாறும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 69761 நிதித்(ஆதி(ம)பந)துறை, 2015–1, நாள்.07.01.2016 –இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.1872 (ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தி இரண்டு)

//ஆளுநரின் ஆணைப்படி//

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை– 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–18.
மாநிலக்கணக்காயர், சென்னை–9/18.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8.
நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (நிதி மற்றும் பொதுப்பணி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொ II/வ.செ.பொ.I)துறை, சென்னை–9.
அரசு செயலரின் முதுநிலை தனிச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–6/கமபா/சிஉதி/அநமு–1)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.